தகுதி, திறமை தட்டிக்கழிக்கப்படுகின்றனவாம்

Phone No 4502
விலை அரை அணா

Regd. No. M. 5458
இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C.N. அண்ணாதுரை M.A.   MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1]   சென்னை (12—4—50)   வெளியூர் (13—4—50)   [இதழ் 222

அவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர், இவர் ஆயாசப்படுகிறார்

சி. வி. ராமனும் சிந்திக்க மறுப்பதா?

இயந்திரக் கல்வி பயின்றோர் மாநாட்டில் பேசவேண்டியது இதுதானா?

கோவை, ஏப். 10—

"தகுதிக்கு மதிப்புக் தந்தால்தான் நாடுமுன்னேற முடியும்; ஆனால் துர் அதிர்ஷ்டவசமாகச் சென்னை மாகாணத்தில் தகுதிக்கும் திறமைக்கும் இடம் இல்லை; அவைகள் ஒதுக்கித் தள்ளப்படுகின்றன; மற்ற பிரச்சினைகளுக்குத்தான் அதிக முக்யத்வம் கொடுக்கப்படுகிறது'' இதுபோன்றதொரு செய்தியை ஒருநாள் இதழில் ஒருவர் படித்தால் என்ன நினைப்பார்? யார் பேசியிருப்பாரென்று கருதுவார்? சேலத்தில் நடந்த பிராமணர் மாநாட்டில் ஓய்வெடுத்துக் கொண்ட நீதிபதி சந்திரசேகர அய்யர் பேசி இருப்பார் என்று நினைப்பார். வயோதிகத் தன்மையடைந்து, பேரப்பிள்ளைக்குக் கல்லூரியில் இடம் கிடைக்கவில்லையே என்று யோசித்துக் கொண்டிருக்கும் தோழர் கணபதி அய்யர், "தகுதி, தி[illegible] தானே [illegible]ப் பற்றி ரசிக ரஞ்சனி சபாவில் தோழர் வெங்கட்ராம சாஸ்திரியார் பேசி இருப்பார், அல்லது அவரைப் போன்று முதிர்ந்த அனுபவம் உள்ள தோழர் கெ. எஸ். ராமசாமி சாஸ்திரியாக இருக்கக்கூடும் என்றுதான் நினைக்கமுடியும் மைலாப்பூர் வாசியால். யார் எதைப் பேசுவார்கள் என்பதைப் பலமுறைப் பத்திரிகைகள் புரட்டிப் பார்த்துத் தெரிந்துகொண்ட திராவிடத் தோழன்கூட இதே முடிவுக்குத்தான் வருவான்.

இன உணர்ச்சி இழக்காதப் படித்த திராவிடன் முதல் கொண்டு, வைதீகப் பித்து கொண்ட தோழர் அண்ணாசாமி அய்யர்வரை, "தகுதி, திறமை சென்னை மாவட்டத்தில் காற்றில் விடப்படுகிறது'' என்று பேசியவர் விஞ்ஞானத்துக்கு ஒரு விளக்குபோல இருக்கும் தோழர் சர். சி. வி. ராமன் என்று கனவு கூடக் காணமாட்டார்கள். தகுதியும், திறமையும் தமக்கே சொந்தம் என்றுகூறிக்கொண்டு, அதைப் பிறர் அபகரிக்க எண்ணுவது தகுமா என்பதை வலியுறுத்தக் கூட்டப்பட்ட பிராமணர் மாநாட்டில் பேசவில்லை தோழர் சர். சி. வி. ராமன். அவர் பேசியது கோயம்பத்தூரில் நடந்த இன்ஜினியரிங் லைசென்ஸு பெற்றவர்கள் மாநாட்டில்.

"கற்ற இயந்திரக் கல்வியைக் காற்றில்விட்டு ஏதோ ஒப்புக்கு உழைக்காதீர்கள் நாட்டின் முற்போக்குக்குப் பாடுபடுங்கள். வளம் பெற்றும், வளப்பமற்ற வாழ்க்கை நடத்தும் ஏழை இந்திய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தச் சலியாது உழையுங்கள்'' என்று புத்தி புகட்டி இருக்கவேண்டும் இயந்திரக் கல்வி கற்றோர் மாநாட்டில். அப்புத்தி புகட்ட சர். சந்திரசேகர வெங்கடராமனுக்கு இருப்பதுபோல் வேறுயாருக்கும் அதிக அதிகாரம் கிடையாது. ஏனென்றால், விஞ்ஞானத்தை உணர்ந்த ராமன், விஞ்ஞானத்தால் உலகம் வேகமாக முன்னேறுவதை உணர்ந்த ராமன், பலர் காணுதலற்றைக் கண்டறிந்த ராமன மாநாட்டில் நல்லுரை கூறியிருக்கவேண்டும். வந்தவர்கள் பூரிப் பெய்தி வளமுற நாட்டைச் செய்ய வஞ்சினம் செய்திருக்கவேண்டும்.

தோழர் சர். சி. வி. ராமன் மறந்துவிட்டார் எங்கே பேசுகிறோம், என்ன பேசவேண்டும் என்பதை. "தகுதி வேண்டும், திறமை வேண்டும், சென்னை மாகாணத்தில் இவைகள் ஒதுக்கித் தள்ளப்படுகின்றன'' வென்று கூறுகிறார் தோழர் ராமன். வசதியின் காரணத்தால் ஒரு சிலரின் கையில் சிக்குண்டிருக்கும் சென்னைப் பத்திரிகைகள், பக்கம் பக்கமாக எழுதித் தள்ளின வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் ஒழிய வேண்டுமென்று. வாய்ப்பு இருந்த காரணத்தால், ஒரு சமூகத்தினரே அதிகமாகப் படித்திருக்கிறார்கள்; படித்துவிட்ட காரணத்தால் தகுதியும் திறமை அவர்கள் அதிகம் பெற்றுள்ளனர்; திறமையைப்பயன்படுத்திக் கொள்ளுங்கள்'' என்று கூறினார்கள். அவர்கள் கூறுவதின் பொருள்தான் என்ன? நூற்றுக்கு 97 சத விகிதமாக உள்ள நீங்கள் அடிமுட்டாள்கள், உங்களுக்கு உங்களையே ஆண்டுகொள்ளத் தெரியாது. ஆகையால், நாங்கள் ஆளுகிறோம் என்பதுதான் அவர்கள் கூற்று. பத்திரிகைகள் மட்டுமல்ல, சமயம் வந்தபோதெல்லாம் மேடைகிடைக்கும்போதெல்லாம் பேச்சாகக் கொட்டித் தீர்த்தார்கள் ஒரு சாரார்.

'வாய்ப்பிருந்தால் யாரும் முன்னுக்குவர முடியும். வாய்பபுத்தர வேண்டுவது அவசியம்' என்ற நோக்கத்தோடே ஜஸ்டிஸ் கட்சி வகுப்புவாதப் பிரதிநிதித்துவம் கொண்டுவந்தது. அம்முறை சிறந்ததென்று மக்கள் கருதுவதால்தான், பொதுமக்கள் கிளர்ச்சி செய்வார்கள் என்ற பயத்தால்தான், கட்சிக் கொள்கைக்குப் புறம்பாக இருந்தும், பதவி ஏற்றுக் கொண்ட காங்கிரஸ்காரர்கள் ஒன்றும் செய்ய இயலவில்லை.

"பார்ப்பனர், பார்ப்பனர்

(தொடர்ச்சி 2-ம் பக்கம் பார்க்க)

"பயந்துவிடமாட்டேன் பார்த்துவிடுகிறேன் ஒருகை"

சுப்ரீம் கோர்ட்டுக்குச் செல்லவும் தயார்!

மந்திரிகள் மீது குற்றச்சாட்டு பற்றி பிரகாசம்

விஜயவாடா, ஏப். 11—

மந்திரிகள் மீதுள்ள குற்றச்சாட்டுகள் விசாரிக்கப்பட வேண்டுமென்று சென்னை சட்டசபையில் தோழர் பிரகாசம் கொண்டுவரவிருக்கும் தீர்மானத்தை எக்காரணத்தைக் கொண்டும் வாபஸ் பெற[illegible] எப்போவதில்லையென்று [illegible]டி. பிரகாசம் நேற்று விஜயவாடாவில் அறிவித்தார்.

காங்கிரஸ் ஊழியர் மாநாட்டில் தோழர் பிரகாசம் பேசுகையில், "ஒழுங்கு நடவடிக்கையோ அல்லது காங்கிரஸ் மேலிடமோ என்னைத் தடுத்துவிட முடியாது'' என்று அவர் அறிவித்தார்.

"அவசியம் ஏற்பட்டால் நீதி மன்றத்துக்கும் வேண்டுமானால் சுப்ரீம் கோர்ட்டுக்குச் செல்லக் கூடத் தயங்கமாட்டேன்'' என்று தோழர் பிரகாசம் அறிவித்தார்.

சுடுகின்றேன் என்று வெள்ளையன் பயமுறுத்தியபோது பதுங்கிவிடவில்லை தோழர் பிரகாசம். மார்பைக் காட்டிச் சுடு என்றார்; அந்தத் தைரியம்தான் அவருக்கு ஆந்திரகேசரி (சிங்கம்) பட்டத்தைக் காங்கிரஸாரிடமிருந்தே, வாங்கித்தந்தது அப்படிப்பட்ட தோழர் பிரகாசம் ஒழுங்கு நடவடிக்கைக்கோ, மேலிடத்தின் மிரட்டலுக்கோ பயப்படமாட்டார். பயப்படத் தேவையில்லை.

நீதி மன்றத்தில் காங்கிரஸ்மீது, இல்லை காங்கிரஸ் மந்திரிகள்மீது குற்றச் சாட்டு! குற்றக் கூண்டில் நிற்கும் மந்திரிகளைத் தோழர் பிரகாசம் கேட்பார், 'நிரபராதி நான்' என்று மந்திரியார் கூறட்டும்; கூறத் தைரியமில்லாவிட்டால் வழக்கறிஞர் ஒருவருக்கு வாதிக்கப் பணம் கொடுத்து நியமிக்கட்டும்! மந்திரிகள் மீது சாட்டப்பட்ட குற்றங்கள் நிரூபிக்கப்படாவிட்டால் மந்திரிகளின் மதிப்பும் உயரும்; மக்களுக்கும் மன அமைதிஏற்படும்; பழிச்சொல்லிலிருந்து விடுதலை பெற்ற அவர்கள், தோழர் பிரகாசத்தைக் குற்றவாளிக் கூண்டில் தைரியமாக ஏற்றிவிடலாமல்லவா?

மந்திரிகள் ராஜிநாமாபற்றி விவாதிக்கப்படும்

புது டில்லி, ஏப். 10—

ராஜிநாமா செய்த மந்திரிகளான ஸியாம்பிரசாத் முகர்ஜியும், கே. ஸி. நியோகியும் தங்களுடைய ராஜிநாமாக்களை வாபஸ் பெற்றுக்கொள்ளக் கூடும் என்று, விஷயமறிந்த வட்டாரத்தினர் கருதுகின்றனராம்.

பண்டித நேருவுக்கும் முகர்ஜி, நியோகி ஆகியோருக்குமிடையே கடிதப் போக்கு வரத்து நடைபெற்றதாகவும், விரைவில் காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் இது பற்றி விவாதிக்கப்படுமென்றும் சொல்லப் படுகிறது. தோழர் முகர்ஜி அல்லது நியோகியை மத்திய சர்க்கார் சார்பில் வங்கத்தில் இருக்கச் செய்வது என்ற பேச்சும் மந்திரிசபை வட்டாரத்தில் யோசிக்கப்படுகிறது.

அடிமைத்தனத்தை ஒழிக்க ஐ. நா. முயற்சி

அளவு, நிலை முதலியவை ஆராயப்படுகின்றன?

நியூயார்க், ஏப். 11—

உலகத்தில் பலவிதங்களில் அமுலிலிருந்துவரும் அடிமைத்தனத்தை அடியோடு ஒழித்துக்கட்ட ஐ. நா. ஏற்படுத்தியுள்ள கமிட்டி வேலை செய்ய ஆரம்பித்திருக்கிறது. உலக முழுவதிலும் எங்கெங்கு எத்தகைய முறையில் அடிமைத்தனம் இருந்து வருகிறதென்பதைக் கணக்கிட இக் கமிட்டியில் 4 நிபுணர்கள் இடம் பெற்றிருக்கின்றனர்.

நிர்பந்தித்து வேலை வாங்குவதை இக்கமிட்டி தன் வேலை திட்டத்தில் சேர்க்கவில்லை என்றாலும், இவ் விஷயமாக தகவல் தரும்படி சர்வதேசத் தொழிற் ஸ்தாபனம் (ஐ. எல். ஓ) கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அடிமைகளை வைத்திருப்பது இஸ்லாமிய நாடுகளில் இன்னும் இருந்துவருவதாகக் கூறப்படுகிறது.

'எஸர்ப்டம்' என்று சொல்லப்படும் நிலத்தில்உழைக்கும் அடிமைத்தனம், அமெரிக்காவில் சில பகுதி தென் ஆசியாவில் காணப்படுகிறது.

குழந்தைகளைத் கத்து எடுத்துக் கொண்டு அடிமைப்படுத்தும் வழக்கம் தென் கிழக்கு ஆசியாவிலும், தென்னுப்பிரிக்காவிலும் காணப்படுகிறது.

கடன் திருப்பித்தர முடியாததால் அடிமைப்படுவது அமெரிக்கா, தென் ஆசியா கிராமாந்திரப் பகுதிகளில் இருந்துவருகிறது.

இதுபற்றிய தகவல்களைத்தெரிவிக்கும்படிகேள்வித்தாள்கள்தயாரிக்கப்பட்டு எல்லா நாடுகளுக்கும் அனுப்பப்பட்டிருக்கின்றன. கமிட்டி நவம்பரில் லேக்ஸக்ஸஸில் கூடி, வரும் பதில்களைப்பற்றி ஆலோசிக்கும்.

இதற்கிடையே ஒவ்வொரு மெம்பரும் ஒவ்வொரு நாட்டிலுள்ள அடிமைத்தனத்தைக் குறித்து ஆராயக் கேட்டுக்கொண்டிருக்கின்றனர்.

"நேரடி நடவடிக்கையில் இறங்குக!"

ஐரோப்பாவிலுள்ள கம்யூனிஸ்டுகளுக்கு மாஸ்கோ உத்தரவு?

லண்டன், ஏப். 11—

அரசியல் துறையில் குழப்பம் ஏற்படுத்தும் வேலையில் வெற்றி ஏற்படாததின் காரணமாக 'நேரடி நடவடிக்கை'களில் இறங்கும்படி, ஐரோப்பாவிலுள்ள கம்யூனிஸ்டுகளுக்கு மாஸ்கோவிலிருந்து தாக்கீது வந்திருப்பதாக நம்பப்படுகிறது.

பிரெஞ்சு கம்யூனிஸ்டு கட்சியின் 12-வது காங்கிரஸ் நடவடிக்கையிலிருந்து இம்மாதிரி சந்தேகிக்க இடமிருக்கிறதாம்.

பிரிட்டனிலும் சதி வேலை, வேலை நிறுத்தங்களைத் தூண்டிவிடுதல்முதலியவைகளில் தீவிரமாக ஈடுபடும்படி கம்யூனிஸ்டுகளுக்கு உத்தரவு கிடைத்திருக்க வேண்டும் என்று கூறப்படுகிறது.

மாப்பிள்ளை சமர்த்தரடி

மாட்ரிட், ஏப். 11—

பிராங்கோவின் மகளுக்கும்மார்குவிஸ்டி வில்லவர்டேக்கும் நேற்று திருமணம் நடைபெற்றது. மாப்பிள்ளை சுவாஸப்பை வியாதி வைத்தியத்தில் நிபுணராம்,

மாலை மணி

சென்னை 12—4—50 புதன்கிழமை

உயிர் ஊட்டுங்கள்

"பத்திரிகைகளின்பொறுப்பு மகத்தானது. ஆட்சி முறை சரியான பாதையில் செல்லுவதும், செல்லாததும் பத்திரிகைகளின் போக்கினை ஒட்டியே அமையும். மக்களை சரியான பாதையில் அழைத்துச் செல்ல வேண்டிய பொறுப்பும் பத்திரிகைகளைச் சார்ந்ததே. இத்தகைய பொறுப்பினை உணர்ந்து இந்நாட்டுப் பத்திரிகைகள் இந்திய-பாக். ஒப்பந்தம் வெற்றி பெறும்படி செய்யும் என நம்புகிறேன்."

இது, கடந்த திங்கட்கிழமை இரவு வானொலியில், இந்தியா-பாக். ஒப்பந்தம் பற்றி பேசிய பண்டித நேரு தனது பேச்சின் இறுதியில் பத்திரிகை உலகிற்குத் தந்துள்ள அறிவுரை.

"சிறுபான்மையோர் அமைதியான சூழ்நிலையில் வாழ வழிகோல வேண்டிய பொறுப்பு பத்திரிகைகளுடையது. எனவே இந்திய-பாக். ஒப்பந்தம் என்னும் நன்மை பயக்கத் தக்கதோர் முயற்சிக்கு அவைத் தம்மாலியன்ற ஆதரவைத் தரவேண்டும்."

இது புதுடில்லியிலிருந்து பண்டித நேரு பேசிய அதே நேரத்தில், பாக்கிஸ்தான் பிரதமர் தோழர் லியாகத் அலிகான்; கராச்சியிலிருந்து வானொலி மூலம் தந்திருக்கும் அறிவுரை.

இங்ஙனம் இங்கும் அங்கும் உள்ள நாட்டுத் தலைவர்கள் பத்திரிகைகளுக்குத் தந்திருக்கும் இந்த அறிவுரைகளை இந்நாட்டுப் பத்திரிகைகளுக்கு—சிறப்பாக தேசீய ஏடுகளென்னும், பரந்த மனப்பான்மையோடு பணியாற்றுவதாகப் பறைசாற்றித் திரியும் ஏடுகளுக்கு அப்படியே அர்ப்பணம் செய்ய விழைகிறோம்.

இன்றைய நிலையில் உலகில் பத்திரிகைகள் ஆற்றும் பணி அளவிடற்கரியது. மக்கள், அரசாங்கம் என்னும் இரு பெரும் பிரிவுகளுக்கிடையே நின்று ஆக்கல், காத்தல், அழித்தல்என்னும் பணிகளைச் செய்யும் ஆற்றல் படைத்தவை பத்திரிகைகளே.

எனவேதான், நாட்டுத் தலைவர்கள் பத்திரிகைகளின் பண்பறிந்து அவற்றுக்கு அறிவுரை வழங்கி வருகின்றனர். சர்வதேச அரசியலிலாகட்டும், உள்நாட்டு அரசியலிலாகட்டும்இரு நாடுகளுக்கிடையே போர் நிகழக் காரணமாயிருப்பவையும் பத்திரிகைகளே

இவ்விந்திய உபகண்டத்திலே ஏற்பட்ட, ஏற்பட்டு வரும் வகுப்புப் போராட்டங்களுக்குக் காரணம், பத்திரிகைகளே என்றால் மிகையாகாது. தேசீய ஏடுகள் எனப்படுவனவெல்லாம் பாக்கிஸ்தான் மீது வசை புராணம் பாடுவதுதான், தமது தேசீயத் திருப்பணி என்று கருதுகின்றன. இதுபோலவே, பாக்கிஸ்தான் ஏடுகள் சிலவும் இந்தியாவைத் தமது எதிரியாகச் சித்தரித்துக் காட்டும் திருப்பணியில் ஈடுபடுகின்றன.

இங்ஙனம் அங்கும் இங்கும் ஏடுகள் மூலம் மூட்டப்படும் வகுப்புவாதத் தீதான், நாளடைவில் மக்களை மாக்களாக்கி, சொற்போர் மூலம் சுலபத்தில் தெளிவு காண வேண்டிய பிரச்னைகளையெல்லாம் மற்போர் மூலம் மேலும் சிக்கலாக்கும்படி செய்து வந்தன— செய்தும் வருகின்றன. இதன்விளைவாக குத்து வெட்டு,கொலை முதலியனவும் நிகழக் காண்கிறோம்.

இந்த நிலை மாறவேண்டும். மாறினாலன்றி நாட்டுத் தலைவர்கள் எத்தனைதடவை கூடி எத்தகையசிறந்த ஒப்பந்தங்களைத் தயார் செய்தாலும், அவற்றால் பயன் ஏதும் விளையா. ஒப்பந்தங்களைத் தயார் செய்வது எளிது. ஆனால் அவற்றுக்கு உயிர் கொடுப்பதுதான் கடினம்.

அரசியல் ஒரு சருக்கு மரம்; அதில் ஏறுவது மிக மிகக் கடினம். 'சாண்' அளவு ஏறினால் 'முழம்' அளவு சருக்கும். இப்படிப்பட்ட சருக்கு மரத்தில் ஏறுவோர் மிகமிக ஜாக்கிரதையாக ஏறவேண்டும். அப்படி ஏறினால்தான் அமைதி, நல்வாழ்வு, நாடுகளுக்கிடையே நல்லுறவு, இன்னபிற குறிக்கோள்களை அடைய முடியும்.

இத்தகைய நல்லகுறிக்கோள்களை நாடிச் செய்யப்படுபவை தான் ஒப்பந்தங்கள் எனப்படுவன. இவ்வொப்பந்தங்கள் என்னும் கருவிகளைத் துணைகொண்டு அரசியல் சருக்கு மரத்தில் தலைவர்கள் முன்னேறுங்கால் அவர்களுக்கு— அவர்களின் குறிக்கோள்களுக்கு ஊறுநேராதபடி பார்த்துக்கொள்வதும், உறுதுணை செய்வதும் ஆன கடமைகளை ஆற்ற வேண்டிய பொறுப்பு பத்திரிகைகளைச் சார்ந்தது,

பத்திரிகைகள் இக்கடமைகளைச் செய்யத் தவறுமேல்ஒப்பந்தங்கள் உயிர்ப்படா. அரசியல் தலைவர்கள் அவர்தம் குறிக்கோள்களைஎட்டிப்பிடிக்க முடியாது. அதுமட்டுமல்ல; இருக்கின்ற நிலைமேலும்மோசமானாலும் ஆகலாம். சருக்கு மரத்தில் ஏறும் தலைவர்கள், படுபாதாளத்தில் வீழ்த்தப்பட்டாலும்படலாம். அங்ஙனம் தலைவர்கள் வீழ்ச்சி அடைவார்களேயாகில், அதுநாட்டு மக்களின் வீழ்ச்சியாகும்.—நாட்டு நலிவுகளுக்கு அறிகுறியாகும்.

சர்வதேச அரசியல் அறிந்தவர்களுக்குத் தெரியும், வல்லரசுகளுக்கிடையே ஏற்பட்ட ஒப்பந்தங்கள் எண்ணிக்கையிலடங்காதென்ற உண்மை. ஆனால், அந்த ஒப்பந்தங்களில் எத்தனை ஒப்பந்தங்கள் கோரிய பலனைத்தந்தன? பேசப்படும் நேரத்திலேயே முறிந்துபோன ஒப்பந்தங்கள் பல; பேசி முடிந்த அதே நேரத்தில் முறிந்தவை பல, நிறைவேற்றப்படும் நேரத்தில் முறிந்தவை சில என்று ஒப்பந்தங்கள் பல அற்ப ஆயுளில் மறைந்திருக்கின்றன.

இவற்றுக்கெல்லாம் பலப்பல காரணங்கள் சொல்லப்படலாம். ஆனால் உண்மையை ஆராய்ந்துபார்க்கின்றபோது, பத்திரிகைகளின்பங்கு இதில் மிகுதியாக உண்டு என்பது புலனாகும். ஒரு ஒப்பந்தம் உருவான அதே நேரத்தில், அதுபற்றி பத்திரிகைகள் தரும் உத்தேசங்கள், கருத்துரைகள், ஹேஷ்யங்கள் முதலியன ஒன்று சேர்ந்து பலவித குழப்பங்களையும், அரசுகளுக்கிடையே அச்சத்தையும், ஐயப்பாடினையும் எழுப்பிவிடுகின்றன. பின்னர் அது காரணமாகப் பல கேடுகள் சூழுவது வழக்கம்; இவ்விதமாகவே வல்லரசுகளிடையே நீண்ட நாட்களாக வம்பு வளர்ந்து வருகிறது.

சுருங்கச் சொல்ல வேண்டுமானால், ஒப்பந்தங்கள் உயிர் பெறுவதும், உயிர் இழப்பதும் பத்திரிகைகளின் பண்பைப் பொறுத்தே இருக்கிறது எனலாம்.

எனவேதான், இந்தியா-பாக் ஒப்பந்தம்பற்றித் பேசிய பண்டிதர் முறையே அமைதிகாண வேண்டியதன் அவசியம், அவசரம், நம்பிக்கையோடு பணிபுரிதல், நேர்மையில் நாட்டம் [illegible]ளுதல் என்று படிப்[illegible]க் கூறிவந்து, இறுதியில் "இவை அனைத்தும் வெற்றிகரமாக நிறைவேறும்படி செய்யும் பொறுப்பு உங்களுடையதே" என்று பத்திரிகைகள் மீது பாரத்தைப் போடுகிறார்.

அங்ஙனமே பாகிஸ்தான் முதலமைச்சரும், பத்திரிகைகளின் பங்கு இவ்விஷயத்தில் எத்துணை சிறந்தது என்பதை வலியுறுத்தியுள்ளார்.

இவ்விதம் இவ்விந்திய உபகண்டத்தின் இருபெரும் அரசியல் தலைவர்கள் பத்திரிகைகளை நம்பி ஒரு நற்பணியில் இறங்கியுள்ளனர்என்றால், பத்திரிகைகள் கொள்ளவேண்டிய பொறுப்புணர்ச்சி எத்துணை சிறந்தது என்பதை நாம்விளக்கவும் வேண்டுமோ எனவே, ஒப்பந்தத்திற்கு உயிர் தந்து, இந்நாட்டில் அமைதி நிலவ வழிகோலுங்கள் என்று கூற விரும்புகிறோம்.

வாலாஜா குழப்பத்தின் எதிரொலி

49-பேர் கைது

ராணிப்பேட்டை, ஏப். 10

வாலாஜாபேட்டைக்கருகில்நடந்த மக்கள் தாக்கப்பட்டதை யொட்டி 49 பேர்இதுவரைக் கைது செய்யப்பட்டுள்ளார்கள். ரிஸர்வ் போலீஸ், கலவரம் நடந்த இடத்தைக் காவல் செய்துவருகிறார்கள்.

ஒரு வாரமாக இப்பகுதியில் நிலைமை அமைதியாக இல்லாததால் வாலாஜாபேட்டையிலிருந்து, போலீஸ் பாதுகாப்புடன் தபால்கள் எடுத்துச்செல்லப்படுகின்றன.

சென்னை, ஏப். 11—

மலையாளம், தென்கன்னட ஜில்லாக்களில் கால்நடைப் பண்ணைகள் நடத்தும் திட்டத்திற்கு சர்க்கார் அனுமதி அளித்து விட்டனர்.

முத்தமிழ் மாநாடு

கோவை நகரில், மே, 13, 14-ந் தேதிகளில் **முத்தமிழ் மாநாடு** நடைபெற ஏற்பாடுகள் துவக்கப்பட்டுள்ளன.

முத்தமிழ், நாட்டு நல்வாழ்வுக்குப் பயன்படும் முறையில் இருக்கவேண்டும் என்ற நோக்கத்தை விளக்கி வலியுறுத்த இம்மாநாடு நடைபெறுகிறது.

இயல், இசை, நாடகம், எனும் மூன்று பிரிவுகள் கொண்டதாக மாநாடு அமையும்,

மாநாட்டில், பகுத்தறிவுப் பாடல் போட்டியும், பரிசு வழங்குதலும் நடைபெறும்.

இரு நாட்களிலும், இரவில் தோழர் சி. என். அண்ணாத்துரை குழுவினரின் நாடகங்கள் நடைபெறும்

கம்பர் விழாக்களும் கலை அரங்குகளும் நடத்தப்பட்டு, முத்தமிழ் பழமைக்குப் புத்துயிரூட்டப் பயன படுத்தப்படும் இப்போது, பகுத்தறிவு வாதிகள், முத்தமிழ் மூலம் நாடுபெற வேண்டிய உண்மையான பலனை எடுத்து விளக்கவேண்டியது மிக மிக அவசியமாகிறது. ஆகவே, முத்தமிழ் மாநாட்டை வெற்றிகரமானதாக்கித்தரும் பொறுப்பை, மாகாணமுழுவதுமுள்ள திராவிடத் தோழர்கள் மேற்கொள்ள வேண்டுகிறோம்.

மாநாட்டிலே, சொற்பொழிவுகள், கவிதைப் போட்டி, பாடல் போட்டி, நாடகங்கள் ஆகிய சுவையும் பயனும் உள்ள நிகழ்ச்சிகள் பல உண்டு.

விரிவான விளக்கம் விரைவில் தெரிவிக்கப்படும்

அமைப்பாளர்கள்,

கோவை மாவட்ட தி. மு. கழகம்

தகுதி, திறமை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அல்லாதார் பிரச்சினை வகுப்புவாதமென்று ஒதுக்கித் தள்ளிவிட முடியாது; அது ஒரு அடிப்படைப் பிரச்சினை; அப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும்" என்று கூறினார் சென்னைப் பங்கலைக் கழக பட்டமளிப்பு விழாவில் தோழர் சர். ஏ. ராமசாமி முதலியார். அரசியலை அலசி அலசிப் பார்த்தவர்; ஐ. நா.வின் கிளை ஸ்தாபனத்துக்குத் தலைமைதாங்கியவர்; "உம்மைப்போன்ற திறமைசாலியைக் கண்டதே இல்லை" என்று, 30 நாடுகள் ஒன்று கூடி வரவேற்புப்பத்திரம் வாசித்தளிக்கப்பட்டவர் தோழர் சர். ஏ. ராமசாமி முதலியார் கூறுகிறார், அது அடிப்படைப்பிரச்னையென்று ஆனால் அவ்வாறு புலப்படவில்லை தோழர் சர். சி. வி. ராமனுக்கு!

தோழர் சர். சி. வி. ராமனை நாம் என்றும் மதித்துவந்தோம், உலகமறிந்த விஞ்ஞானி என்ற காரணத்தால் அவரும் இதுவரை விஞ்ஞானத்திலேயே மூழ்கி இருந்த காரணத்தால் கருத்து முரண்பாடுள்ள பிரச்சினைகளைப்பற்றிப்பேசவில்லை. இன்று ஆரம்பித்திருக்கிறார் தம்முடைய சமூகத்தினர் நலனுக்காகப் பிரசாரம் செய்ய, இனப்பற்று யாவருக்கும் இருந்து தனே தீரும்!

லண்டன், ஏப். 11—

சில கடற்கரைகளை கடல் அரிப்பதற்குக் காரணமென்னவென்பது ஒருபெரிய அளவில் ஆராய்ச்சிநடத்தி கண்டுபிடிக்கப்படும் கடலில் அடிப்பது போன்ற புயல்கள் செயற்கையாக இங்கு செய்யப்படுமாம்.

—இளோப்

ஆலை மூடும் படலம்

பம்பாய், ஏப். 10—

இன்று இங்கு கூடிய பத்திரிகை நிருபர்கள் மாநாட்டில் பேசிய பம்பாய் [illegible]சர் தோழர் நா[illegible]லை வெளியிட்டுள்ளார்.

பம்பாய் மாகாணத்தில் 9 நெசவாலைகள் அறவே மூடப்பட்டுவிட்டன. பம்பாயில் மூடப்பட்ட ஆலைகளின் எண்ணிக்கை மட்டும் 13. இதனால் 27,850 தொழிலாளர் வேலையிழந்தவர்களாகின்றனர்.

அமைச்சர் மேலும் பேசியபோது மேலும் 17 ஆலைகள் மூடப்படலாம் என்றும், அதனால் 30,203 தொழிலாளர் பாதிக்கப்படலாம் என்றும் கூறினார்.

இப்படி ஆலைகள் மூடப்படுவதற்குக் காரணம்பஞ்சுப்பஞ்சமும், பொருளாதார நெருக்கடியுமே என்றும், அவர்கூறினார்.

தற்போது ஷோலாப்பூர் ஆலையில் 1000 தொழிலாளர்களும் 27,000 கதிர்களும், 76 தறிகளும் இருப்பதாகவும், அடுத்தமாத இறுதியில் 35 000 கதிர்களும், 120 தறிகளும், வேலைசெய்ய ஆரம்பிக்கும் என்றும், இதனால் 6000 தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்குமென்றும் அவர் கூறினார். மூடப்பட்ட ஆலைகளைத் திறக்க அரசியலார் ஆவன செய்வார்கள் என்றும், அவர் கூறினார்.

கால்வாயைக் கடக்க முயற்சி

லண்டன், ஏப். 11—

இங்கிலீஷ் சானலைக் கடக்க 57 எகிப்திய நீச்சு நிபுணர்கள் கலந்து கொள்வர் என்றும், இவர்கள் இதற்கென பயிற்சி பெற்று வருவதாகவும் கூறப்படுகிறது.

இனி நடப்பவை

கோடம்பாக்கம் சென்னை:— 13—4—50ல் இவ்வூர் இளைஞர் கழக ஆண்டுவிழா வியாழன் மாலை 6 மணிக்கு வரதராஜப் பேட்டையில் தோழர் வி. கே. ஜான் அவர் தலைமையில் தோழர் கள் சிவஷண்முகம் பிள்ளை, டாக்டர் பி. வி. செரியன் முன்னிலையில் நடைபெறும்.

ஆப்கனியர் அலட்சியமாய் இருக்க முடியாது

பாகிஸ்தானுடன் இணைந்து வாழ இணங்கோம்

டூரான்ட் கோடு தகராறு பற்றி ஆப்கன் சர்க்கார் கருத்து

நியூயார்க், ஏப். 10—

"எல்லை மாகாணம் பாகிஸ்தானின் ஒருபகுதிதான் என்பதை, ஆப்கன் சர்க்கார் ஒரு நாளும் ஒப்புக்கொள்ளாது. பட்டானியர்கள் தாங்கள் தனித்து இருக்கவேண்டுமா அல்லது, பாக்கிஸ்தானுடன் சேர்ந்து இருக்க வேண்டுமா என்பதை எவ்வித நிர்பந்தமுமில்லாமல் அவர்களேமுடிவு செய்ய வேண்டிய விஷயமாகும். ஆகவே, இப்பிரதேச மக்கள் பாதிக்கப் படுவதை கண்டு ஆப்கானியர்கள் ஏனோ என்றிருக்க முடியாது" என்று வாஷிங்டனிலுள்ள ஆப்கன் தூதுவர் மன்றச்செயலாளர் திரு ரஹ்மான் ஜவாக 'நியூயார்க் டைம்ஸ்' பத்திரிகைக்கு எழுதியக் கடிதம் ஒன்றில் குறிப்பிட்டிருக்கிருர்.

அவர் மேலும் எழுதியிருப்பதாவது:- பாகிஸ்தான் தூதுவர் மன்றத்தைச் சேர்ந்த திரு அகமத் அன்ஸாரி எழுதியுள்ள கடிதம் என் கவனத்தைக் கவர்ந்தது.

'டூராண்ட் லைன்' என்று சொல்லப்படும் எல்லைக் கோடு விஷய பூர்[illegible] சொல்ல[illegible]ம் ஏற்படுகிறது. முதலில் ராணுவப் படையால் இந்தக் கோடு ஆப்கானிஸ்தான்மீது திணிக்கப்பட்டது. இரண்டாவதாக பிரிட்டிஷ் எழுத்தாளர்களே இதைப்பற்றி எழுதுகையில், இந்த எல்லை நிர்ணய விஷயத்தில் ஆப்கன் அமீரோ அல்லது இந்திய சர்க்காரோ சம்பந்தப்படவில்லை என்று வெளியிட்டிருக்கின்றனர்.

இந்த எல்லைக்கோடு போவதாகச் சொல்லும் சில இடங்களை பிளானில் காட்டப்பட்டிருக்கிறதென்றும், உண்மையில் அம்மாதிரி இடங்கள் இல்லை. இந்தப் பிளான்களில் எவ்வித கையெழுத்தும் இடப்படவில்லை. நிர்பந்தத்தின் மீது ஆப்கானிஸ்தான் மீது பிரிட்டிஷ் சர்க்காரால் திணிக்கப்பட்ட இந்த உடன்படிக்கை, ஆப்கன் சர்க்காரைக் கட்டுப்படுத்தாது.

இப்பிரச்னையைப் பாகிஸ்தான் ஏற்படுவதற்கு வெகு காலத்திற்கு முன்பே பிரிட்டிஷ் சர்க்காரிடம் எழுப்பினோம். கிரிப்ஸ் இந்தியாவுக்கு தூதுவந்தபோதும் இவ்விஷயம் எழுப்பப்பட்டது. இந்தியாவில் அரசியல் மாறுதல்கள் ஏற்படும்போது இவ்விஷய கவனிக்கப்படும் என்று கிரிப்ஸ் எங்களுக்குப் பதிலளித்தார்.

பாகிஸ்தான் ஐ. நா. வில் சேர மனுபோட்டு, அவ்விஷயம் அந்த ஸ்தாபனத்தினால் கவனிக்கப்படுகையில், ஐ. நா. விலுள்ள ஆப்கன் தூதுகோஷ்டித்தலைவர் ஹஸன் நயீஸ் எல்லை மாகாணத்தில் பாகிஸ்தான் உரிமை கொண்டாடுவதை ஆப்கானிஸ்தான் ஒப்புக்கொள்ள முடியாது என்றும், எல்லை மாகாண மக்களே சுயேச்சையாக தாங்கள் எப்படியிருக்கவேண்டும் என்பதை நிர்ணயித்துக்கொள்ள வேண்டும் என்பதை எடுத்துக் காட்டியிருக்கிருர்.

ஆகவே பிரிட்டிஷ் சர்க்கார் ஆட்சியிலேயே இப்பிரச்னையை ஆப்கானிஸ்தான் எழுப்பவில்லை என்று கூறுவது சரியல்ல. அன்ஸாரி சொல்வது போல் பிரிட்டிஷ் சர்க்காரை கண்டு நாங்கள் தொடைநடுங்கிக்கொண்டிருக்கவில்லை. மக்களின் விருப்பப்படியே எதுவும் செய்யப்படவேண்டும் என்பதை ஆப்கானிஸ்தான் வற்புறுத்தி வருகிறது.

ஆப்கானிஸ்தானத்திற்கு மண்ணாசைகிடையாது. எல்லை மாகாணத்தைத் தன்னுடன் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணமும் கிடையாது. சுதந்திரக் கொள்கையை ஆதரிப்பதே ஆப்கானிஸ்தானின் இலட்சியமாகும்.

பெரிய தீ விபத்து

டெரெய்லி, ஏப். 9—

நேற்றிரவு டெரெய்லி சரித்திரத்திலேயே கண்டிராத பெரிய தீ விபத்தொன்று நேர்ந்தது. எதிர்பாராத விதமாக ஏற்பட்ட இவ்விபத்தின் காரணமாக 40 முதல் 50 லட்சம் ரூபாய் சேதம் ஏற்பட்டிருக்கிறது.

நள்ளிரவுக்குச் சற்று முன்புதான் இத்தீவிபத்து கண்டுபிடிக்கிறது. பின்னர் பெருமுயற்சியின் பேரில் தீ அணைக்கப்பட்டது. இவ்விபத்திற்குக் காரணம் இன்னதென்று தெரியவில்லை.

கடல் நீரிலிருந்து பெட்ரோல்

லண்டன், ஏப். 11—

பிரிட்டனின் பெட்ரோல் நிலைமையைச் சீர்படுத்த லட்சக்கணக்கான காலன் கடல் தண்ணீரிலிருந்து பெட்ரோல் தயாரிக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

பல லட்சம் பவுன் இத்திட்டத்திற்காக செலவழிக்கப்படும் என்றும், ஷெல், ஆங்கிலோ இரானிய ஆயில் கம்பெனி இவ்விஷயமாக சோதனை எடுத்துவருகிறதென்றும் தெரிகிறது.

வேல்ஸ் கடற்கரையில் இதற்காக பெரிய தொழிற்சாலை ஒன்று கட்டப்பட்டு வருகிறது. கடல் நீரிலிருந்து முதலில் ப்ரோமின் பிரிக்கப்படுமாம். பெட்ரோல் உற்பத்திக்கு டெட்ரோஎதைல் ஈயம் அவசியம் என்றும், இதற்குப் ப்ரோமின் அவசியம் என்றும் கூறப்படுகிறது. இந்தத் தொழிற்சாலை வேலைசெய்ய ஆரம்பித்துவிட்டால் பிரிட்டனுக்கு வருஷத்தில் ஆயிரக்கணக்கான டாலர் செலவு மிச்சப்படுமாம்.

தும்பைவிட்டு வாலைப் பிடித்தல்!

பெங்களூர், ஏப். 9—

மாயமாய் மறைந்த லேயிக் அலியின் வேலைக்காரர்களென்று சொல்லப்படும் ஒரு வண்ணானையும், தோட்டக்காரர் ஒருவரையும் ஹூன்சூர் என்னுமிடத்தில் போலீசார் கைதுசெய்து ஐதராபாத்துக்கு அனுப்பியுள்ளனராம்.

நாடகம் நல்லதோர் பிரசாரக் கருவியாம்!

சென்னை, ஏப். 8—

"பிரசாரக்கருவிகளிலெல்லாவற்றிலும் நாடகம் ஒரு பலம்பொருந்திய கருவியாகும்" என இன்று தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதான[illegible] நாடகச் சுழக உதவிக்காக [illegible] வட்ட "வாதட்கிணை" [illegible] நாடகத்திற்குத் தலைமை வகித்த சென்னை கவர்னர் மஹாராஜா குறிப்பிட்டார்.

இன்று மாலை தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில் கே. சாரங்கபாணி குழுவினரால் 'வாதட்கிணை" என்ற நாடகம் நடிக்கப்பட்டது. சென்னை கவர்னர் நாடகத்திற்குத் தலைமைவகித்தார். நாடகக் கழகத் துணைத்தலைவர் சுப்ரமணியம் கவர்னரை வரவேற்ருர். இறுதியில் தோழர் டி. கே. சண்முகம் நன்றி கூறினர்.

பர்துவானுக்கருகில் துப்பாக்கிப் பிரயோகம்

ஐந்து பேர் கொல்லப்பட்டனர் ஆறு பேருக்குக் காயம்

கல்கத்தா, ஏப். 8—

பர்துவனுக்கு 26 மைல் தொலைவிலுள்ள கிருஷ்ணரம்பூர் என்னும் கிராமத்தை, ஆயுதந்தாங்கிய ஒரு கூட்டத்தார் தாக்கினர். பல குடிசைகளுக்குத் தீ வைக்கப்பட்டது. இதனால், சுமார் 500 மக்கள் வீடின்றி தவிக்கின்றனர். 7000 மணங்கு எடையுள்ள நெற்கதிர்கள் தீக்கிரையாக்கப்பட்டன.

உடனே அவ்விடத்துக்குப் போலீசார் வரவழைக்கப்பட்டனர். போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய ஆரம்பித்ததும், அக்கலகக்காரர்கள் ஓடிவிட்டனர். ஐந்து பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர், 6 பேர் காயப்பட்டனர். பர்துவான் உதவி மாஜிஸ்ட்ரேட்டும் போலீஸ் அதிகாரியும் அவ்விடத்தைப் பார்வையிட்டனராம். இப்பொழுது அமைதி நிலவுகிறதாம்.

வட அமெரிக்காவை சுற்றிவந்த முதல் கப்பல்

ஆட்டவா, ஏப். 10—

'ஸ்டிரோ' என்கிற போலீஸ் ரோந்துக்கப்பல் முதன் முதலாக வட அமெரிக்காவைச் சுற்றிவந்த கீர்த்தியை ஏற்படுத்தவிருக்கிறது. பனாமா கால்வாய் வழியாக ஹாலிபாக்ஸை சேர்ந்தவுடன் இந்தச் சுற்றுப்பிரயாணம் பூர்த்தியாகிவிடுகிறது. இதுவரை பனிபடர்ந்த ஆர்க்டிக்கடலை எக்கப்பலும் கடந்ததில்லை.

பிரிட்டிஷ் கடற்படையில் சிக்கனம்

லண்டன், ஏப். 10—

பிரிட்டிஷ் கடற்படை அதிகாரிகளுக்கு முழு யூனிபாரமும் அணிவிப்பது என்றால் ஏகமாகப் பணச் செலவு ஆகிறதாம். ஆகவே இவைகளைக் குறைத்துவிட பிரிட்டிஷ் கடற்படை இலாகா முடிவு செய்திருக்கிறது. —ரூளோப்

தி. மு. கழக

தலைமைக்காரியாலயம்

கட்டட அமைப்புச் செலவுக்காக

தங்கள் அன்பளிப்பை

அனுப்பிவிட்டீர்களா?

இன்றே தருக!

பணம் அனுப்பவேண்டிய முகவரி:—

சி. என். அண்ணாதுரை,

பொதுச் செயலாளர், தி. மு. க. தலைமை நிலையம்

2/45 முத்தமாரிச் செட்டித் தெரு,

மண்ணடி :: சென்னை-1.

தி. மு. க. தலைமை நிலைய கட்டட நிதி

	ரூ. அ. பை.
முன் வரவு	321—0—0
முகம்மது அலி வாட்டாக்குடி	10—0—0
வ. டி. குப்புசாமி ஜோலார்பேட்டை	2—0—0
எம். கோபால், சென்னை-5	2—0—0
செல்வத்துரை, நாவல்கடி இலங்கை	2—0—0
கா. சுப்பையா, செந்திநாயகபுரம்	2—0—0
கணபதி, சித்தூர்	1—0—0
சி. முனுசாமி, விருத்தாசலம்	5—0—0
	[illegible]45—0—0

அறிவியல் ஆராய்ச்சிகள்

எண்ணெயும் தண்ணீரும் ஒன்று சேரும் விதம்

புதுடில்லி, ஏப். 9—

சாதாரண சோப்புக்குச் சற்றும் சம்பந்தமே இல்லாத பல ரசாயனப் பொருள்களுக்கு, உதாரணமாக செய்ற் கொட்டான் பொட்டை முதலியவைகளுக்கு, சோப்பைப் போலவே அழுக்குப்போக்கும் தன்மை இருக்கிறது. இத்தகைய புதிய ரசாயனப் பொருள்கள் சமீபகாலத்தில் தொழில் துறை முக்கியத்துவம் பெற்றுவருகின்றன. அவைகளின் விலைகளும் உடியவரையில் சோப் விலைகளை அனுசரித்தாற்போல் இருக்கும்படி குறைக்கப்பட்டிருக்கின்றன.

அழுக்கு அகற்றும் தன்மையுள்ள இப்பொருள்கள் சாதாரணமாகக் கரைந்துவிடாத வஸ்துக்களையும் கரைத்து விடக்கூடிய தன்மைபெற்றிருப்பது அவைகளின் தனிக்குணம். எண்ணெயும், தண்ணீரும் ஒன்று சேருமா என்ற விசித்திரமான கேள்விக்கு இவை சரியாகப் பதிலளிக்கும். இவைகளின் உதவியால் எண்ணெயையும், தண்ணீரையும் ஒன்றுகலந்து தெளிந்த ஒரு திரவமாய் மாற்றிவிடலாம். இவ்வழுக்ககற்றிப் பொருள்களை ஒரு குறிப்பிட்ட அளவுக்கு உபயோகிக்கும்போது எவ்வளவு தண்ணீர் எண்ணெயில் கலந்து சேரும் என்று, கண்டறிவதற்காக கல்கத்தாவிலுள்ள இந்திய விஞ்ஞான வளர்ச்சிக் கழகம் ஆராய்ச்சிகளை நடத்தி வருகிறது.

தெருக்கள் சரல் ஆராய்ச்சி

சாலைகளில், கல் பரப்பிக் கெட்டி பண்ணுவதற்காக உபயோகிக்கப்படும் பலவிதமான சரல் கற்கள், கெட்டிப்புப் பொருள்கள் முதலியவைகளை எத்தேர்த்த முறையில் சிக்கனமாக உபயோகிக்கலாம்; தெருக்கள் அமைப்பதற்கான பல்வேறு வேலைமுறைகளின் சாதக அனுகூலங்கள் எவை; மாட்டு வண்டிச் சக்கரங்கள் அழுத்துவதைச் சரிவரச் சமாளிப்பதற்காகத் தரையைக் கெட்டிப்படுத்துவது, அல்லது உரமூட்டுவது எப்படி என்பனபோன்ற பல தெருக்கள் பிரச்னைகளுக்கான பரிசோதனை முறைகளைப் போக்குவரத்து மந்திரி சபையைச் சேர்ந்த சாலைமன்றம் ஆராய்ச்சி செய்திருக்கிறது. இப்பரிசோதனைகள் கல்கத்தாவிலுள்ள தெருக்கள் பரிசோதனைக் கூடத்தில் சோதித்துப் பார்க்கப்பட்டன.

கரும்புப் பயிரிடல் பற்றிய ஆராய்ச்சி

கரும்புத் தொழிலில் விவசாய முயற்சியை அபிவிருத்தி செய்யும் பொருட்டு, கரும்பு பயிர்முறை மூலம் கிடைத்துள்ள உயர்தரமான கரும்புச்செடி, நாற்றுகளும் தனித்துணுக்குகளும் ராஜ்ய ஆராய்ச்சி நிலையங்களுக்கு அனுப்பப்பட்டுவருகின்றன. பலதரப்பட்ட மண்களுக்கும் பருவநிலைகளுக்கும் பொருத்தமான சிறந்த ரகங்களை உற்பத்தி செய்வதுதான் நோக்கம். நல்ல பலனைத் தரக்கூடிய சிலரகங்கள் உற்பத்தி செய்யப்பட்டு நாட்டின் பல பகுதிகளிலும் வினியோகிக்கப்பட்டு வருகின்றன.

ரேவல்கான் கத்தண்டு தயாரிப்புத் திட்டம் சம்பந்தமாக கத்தண்டு, ஹேமிஷாபதி சர்க்கரை வில்லைகள் ஆகியவைகளைத் தயாரிப்பதற்கான பரிசோதனை ஆராய்ச்சி நடந்துவருகிறது.

கழக நடவடிக்கைகள்

சங்கரநயினார்கோவில்:—2-4-50 தி. மு. க. செயற்குழுக் கூட்டம் தோழர் பி. சுப்பையா அவர்கள் தலைமையில் கூடிற்று. பல தோழர்கள் இயக்க கொள்கைகளைப் பற்றி பேசிய பிறகு, ஒரு அனுதாபத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

நெல்லை மாவட்டம் ஏனைய மாவட்டங்களைவிட பின்தங்கி இருப்பது பற்றி இக்கூட்டம் வருந்துவதோடு, உடனடியாக நெல்லை மாவட்ட கழகத்தை அமைத்து ஆக்கவேலையைத் துரிதமாக நடத்துவதற்கு ஏற்பாடு செய்யும்படி மாவட்ட அமைப்பாளரை இக் கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது.

பொதுக்கூட்ட ஆக்கவேலைகள் செய்ய தோழர் டி. ஆர். சுப்ரமணியம் அவர்களுக்கு இக்கூட்டம் அதிகாரம் அளிக்கிறது.

தோழர் வே. கழுகாசலம் அவர்களை விளம்பர உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

* * *

வீராராகவமங்கலம்:—6-4-50 வியாழனன்று மாலை தமிழர் நூல் நிலையத்தில் தி. மு. க. செயற்குழுக் கூட்டம் செயலாளர் தலைமையில் நடைபெற்றது. அதுசமயம் செயற்குழு உறுப்பினர் தோழர் கோ. சிவதாணு அவர்கள் கழகக் கொள்கைக்கு மாறாக நடந்து கொண்டதினால், ஒரு வருடத்திற்கு கழக உறுப்பினர் பதவியிலிருந்து விலக்கிவைப்பதென தோழர் சொ. சோணாசலம் கொண்டுவந்த ஒழுங்கு நடவடிக்கைத் தீர்மானத்தைத் தோழர் ப. ஆறுமுகம் ஆமோதிக்க ஏகமனதாக தீர்மானம் நிறைவேறியது.

விரைவில் ஒரு பொதுக்கூட்டம் நடத்த மாவட்ட செயற்குழு தீர்மானிக்கப்பட்டதை, ஆதரிப்பதுடன், அதற்கு வேண்டிய ஒத்துழைப்பையும் தருவதென முடிவு செய்யப்பட்டது. துணைச்செயலாளர் நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.

* * *

பலராமபுரம் (மலையாளப்பகுதி):- தி. மு. க. பிரசார வகுப்பு-சொற்பயிற்சிக் கூட்டம் 27—3—50 அன்று இரவு தோழர் கு. அகஸ்தியன் அவர்கள் செவுசாலையில் தோழர் ராம. நாகமணி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. முன் கூட்ட நிகழ்ச்சி வாசிக்கப்பட்டது.

தோழர் ஆ. அருணாசலம் அவர்கள் பிரசார வகுப்பில் தி.மு.க. கொள்கையை விளக்கிப் பேசினார். அதற்றபடியாக செயலாளர்தோழர் க. நடராசன் அவர்கள் பெண்கள் முன்னேற்றம் என்ற தலைப்பில் பேசினார். பல விஷயங்களைக் குறித்து ஆலோசிக்கப்பட்டது. தலைவர் முடிவுரைக்குப்பின் கூட்டம் முடிவுற்றது.

* * *

காரைக்குடி:— 26-3-50 அன்று இரவு தோழர் சி. நடராசன் வியாபார நிலையத்தில் தி. மு. க. செயற்குழுக் கூட்டம் தோழர் த. வெள்ளைச்சாமி அவர்கள் தலைமையில் கூடியது. அதுபோது சில அனுதாபத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

விருதை கல்விவள்ளல் தோழர் வெ. சிதம்பரம், காஞ்சி கல்வி வள்ளல் தோழர் கந்தசாமி இருவர் மரணத்திற்கு இக்கூட்டம் வருத்தத்தைதெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் குடும்பத்திற்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

மாவட்ட தி. மு. கழகத்திற்கு இக்கா தி. மு. கழகத்தின் பிரதிநிதியாக, தோழர்கள் அ. க. நடராசன், இராம. சுப்பையா ஆகியோரைத் தேர்ந்தெடுக்கப்பட்டது

செயங்கொண்டம்:—26-3-50 அன்று காலை தி. மு. க. சார்பாக சொற்பயிற்சி தோழர் ஷேக்பாவாசா அவர்களின் இல்லத்தில், தோழர் எம். பாஸ்கரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் பல தோழர்கள் சொற்பொழிவாற்றினார்கள். "பொது நலத்தொண்டு" என்னும் பொருள் பற்றி பல தோழர்கள் சொற்பொழிவாற்றினார்கள். தலைவர் முன்னுரைக்குப்பின் அடுத்த கூட்டத்திற்கு "கல்வி முன்னேற்றம்" என்னும் பொருள்பற்றி பேசுவதாக தீர்மானித்து செயலாளர் அவர்களால் நன்றி கூறப்பட்டு கூட்டம் முடிவுற்றது.

* * *

சேத்துப்பட்டு சென்னை:— 2—4—50 அன்று மாலை தி. மு. கழக நிர்வாக அங்கத்தினர்கள் கூட்டம், தோழர் தெ. மா. ஏகாம்பரம் அவர்களின் தலைமையில் நடந்தது. அதுபோது சில அனுதாபத் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

முடிவாகத் தோழர் ஆ. சுப்பிரமணியம் நன்றி கூற கூட்டம் இனிது முடிந்தது.

* * *

சத்தியமங்கலம்:— 27—3—50 அன்று இரவு தி. மு. க. செயற்குழுக்கூட்டம் தோழர் எஸ். எச். அமீர் தையல்நிலையத்தில், தோழர் எஸ். ஆர். சாமியப்பன் தலைமையில் கூடி கீழ்க்கண்ட தீர்மானங்களை நிறைவேற்றியது.

செயற்குழுவில் இரு தோழர்களை மேலும் சேர்த்துக்கொண்டு கமிட்டியைக் கீழ்க்கண்ட மாதிரி மாற்றி அமைக்கப்பட்டது.

செயலாளர்கள்:- என். ஜி. கண்ணப்பன், கே. செங்கொழுந்து; துணைச்செயலாளர்:- திராவிடன். பொருள் உறுப்பினர்:- எஸ். கே. சென்னியப்பா; வி. உறுப்பினர்:- எஸ். ஆர். குமாரசாமி; துணை, வி. உறுப்பினர் எஸ். ரங்கசுவாமி ஆகிய செயற்குழுவாக 9-பேரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

நம் கழகத் துணைச் செயலாளர் திராவிடனின் உடன்பிறந்தாள், தகப்பனார் ஆகியோர் இறந்ததை குறித்து இக்கூட்டம் வருந்துவதோடு, அன்னார் பிரிவால் வாடும் அவரின் குடும்பத்தாருக்கும், குறிப்பாக திராவிடனுக்கும் இக் கூட்டம் அனுதாபத்தைத்தெரிவித்துக்கொள்ளுகிறது. பின் செயலாளர் தோழர் என். ஜி. கண்ணப்பன் நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.

* * *

சாத்தூர்:—இவ்வூர் தி. மு. க. செயற்குழுக் கூட்டம் 26—3—50 அன்று தோழர் எஸ். துரைசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுபோது விளம்பர உறுப்பினர் தோழர் வி. டி. நடராசன் அவர்கள் வேண்டுகோளுக்கிணங்கி செயலாளராக தோழர் எஸ். துரைசாமி அவர்களையும் விளம்பர உறுப்பினர் தோழர் டபுள்யூ. பொன்னையா அவர்களையும் செயற்குழு ஏகமனதாகத் தேர்ந்தெடுத்து கீழ்க்கண்ட தீர்மானமும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

அடுத்த மாதம் இவ்வூருக்கு வரும் கலைவாணர் தோழர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களுக்கு வரவேற்பு அளிப்பது. மற்றும் சில அனுதாபத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

நமது கழகத்தின் நோக்கத்தை பிரச்சாரம் செய்யும் பொருட்டு, மாதத்திற்குக் குறைந்தது ஒரு பொதுக்கூட்டம் போடுவது என்றும் முடிவுசெய்யப்பட்டது.

இந்து சட்டத் திருத்த மசோதா ஆதரிப்பு

தீர்மானம் நிறைவேற்றிய கழகங்கள்

வேலப்பாடி—வேலூர்.
ஏழுகிணறு—சென்னை.
பாளையங்கோட்டை
கலாஸ்பாளையம்—பெங்களூர்
சூலூர்—கோவை
ஆரணி
வில்லிவாக்கம்
சந்தைப்பேட்டை—மதுரை
பனையபுரம்
திருப்பத்தூர்
செங்குன்றம்
புரசை—சென்னை
சந்தைப்பேட்டை—குடியேற்றம்
அக்கிப்பேட்டை—பெங்களூர்
வனவாசி
செங்கற்பட்டு
சீரனூர்
மாயவரம்
பொள்ளாச்சி
கோயமுத்தூர்
கூறைநாடு—மாயூரம்
செயங்கொண்டம்
மேட்டுப்பாளையம்

சென்னை வாசியை கொன்ற சிங்கம்

சுட்டுக்கொல்லப்படமாட்டாது

லண்டன், ஏப். 11—

சர்க்கஸில் சென்னை வாசியான கேப்டன் நாராயணசாமியைக் கொன்றுவிட்ட சிங்கம் இப்பொழுது காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கிறது. இதைக் காண ஏராளமானவர்கள் வந்துபோய்க்கொண்டிருக்கிறார்கள்.

[illegible] உயிர் காட்சி சாலையும் [illegible] இல்லாவிடில் இச்சிங்கம் சுட்டுக் கொல்லப்பட்டுவிடலாம் என்று சர்க்கஸ் முதலாளி கூறுகிறார். அநேகமாக இச்சிங்கம் ஒரு உயிர் காட்சிசாலைக்கு அனுப்பப்படலாம் என்று தெரிகிறது.

ஸ்பானிஷ் ஆர்மதா

வெளியே எடுக்கும் முயற்சி

லண்டன், ஏப். 11—

டோபர் மோரிவலை குடாவில் மூழ்கி மூழ்கிய ஸ்பானிஷ் ஆர்மதாவைச் சேர்ந்த கப்பல் ஒன்றை, வெளியே எடுக்கும் முயற்சியில் இரண்டாவது கட்டம் ஆரம்பமாகியிருக்கிறது. இக் கப்பலில் விலையுயர்ந்த பொருள்கள் பல இருந்தனவென்றும், இவைகளில் பல இப்பொழுது கிடைக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இக்கப்பல் 1588ல் மூழ்கியதாம்.

ஐஸ்டீஸின் தீவின் சுதந்திரப் பிரகடனம்

லாகிஸ், ஏப். 11—

பிரிட்டானியைச் சேர்ந்த ஐஸ்டீவீன் என்ற 1306 பேர் ஜனத்தொகை கொண்ட ஒரு தீவு சுதந்திரப் பிரகடனம் செய்திருக்கிறது. இதே மாதிரி சுதந்திரப்பிரகடனம் செய்துவிடும்படி இரா சிறு தீவுகளையும் அது கேட்டுக்கொண்டிருக்கிறது.

டச்சுகள் மீது மலான் சர்க்கார் பரிவு

கேப்டவுன், ஏப். 11—

ஆப்பிரிக்காவில் டச்சு மக்கள் அதிகமாக குடியேறுவதை ஆதரிப்பதாக, மலான் சர்க்காரின் மந்திரியான ஸ்டிரைடம் குறிப்பிட்டிருக்கிறார். தென்னாப்பிரிக்க நிலைமைக்கு ஒத்துப் போகிறவர்கள் அவர்கள் தான் என்று அவர் கூறுகிறார். பிரிட்டிஷ் குடியேற்றத்தை இது மறைமுகமாகக் கண்டிப்பதாகவும் என்று கூறப்படுகிறது.

இந்து சட்டத் திருத்த மசோதா ஆதரவு
மாபெருங் கூட்டமும்
கழக மூன்றும் ஆண்டு விழாவும்
13-4-50 வியாழன் மாலை 5-மணிக்கு
சென்னை வேளாள தேனாம்பேட்டை
போலீஸ் ஸ்டேஷன் எதிரில் நடைபெறும்
தலைவர் :—முன்னாள் அமைச்சர்
எஸ். முத்தையா முதலியார்
—: சொற்பொழிவாளர்கள் :—
திருமதி டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியார்
தோழர்கள் சி. என். அண்ணாத்துரை,
என். வி. நடராசன், ப. சச்சிதானந்தம்
கே. ஆர். தாஸ்
அனைவரும் திரண்டு வருக!
தமிழ் இளைஞர் கழகம், வேளாள தேனாம்பேட்டை.

பிரிட்டனில் சில கட்டுப்பாடுகள் நீக்கப்படும்

லண்டன், ஏப். 11—

பிரிட்டனில் சில வர்த்தக் கண்ட்ரோல்கள் ஒழியும் என்றும், சில தளர்த்தப்படலாம் என்றும், இதற்கான அறிவிப்பு சீக்கிரமே வெளியிடப்படலாம் என்றும் கூறப்படுகிறது.

ஐவுளி விலைகள் ஏறலாம் என்றும், இதற்கான கண்ட்ரோல் தளர்த்தப்படும் என்றும் கூறப்படுகிறது.

பாண்டம், கண்ணாடி சாமான்கள் மீதுள்ள கண்ட்ரோல் அடியோடு எடுக்கப்பட்டுவிடலாம்.

இரும்பு கண்ட்ரோலும் தளர்த்தப்படும். வர்ண உற்பத்தியில் யார் வேண்டுமானாலும் ஈடுபடலாம் என்று அறிவிக்கப்படலாம் என்று தெரிகிறது.

ரயில்வே விசாரணை அலுவலகம்

சென்னை, ஏப். 11—

எம். எஸ். எம். சிர்வாகிகளால் பயிற்சி அளிக்கப்பட்ட எட்டு யுவதிகள் சென்னை செண்டிரல் ஸ்டேஷனின் விசாரணை ஆபீஸில் வேலை பார்க்க நியமிக்கப்பட்டிருக்கின்றனர் பிரயாணிகள் கேட்கும் தகவல்களை எப்படித் தெரிவித்து அவர்களுக்கு உதவுவது என்பதைப்பற்றி இவர்கள் ஒன்றரை மாதம் தோழர் தாமோதர முதலியார் என்ற ரயில்வே ஆபீஸரிடம் பயிற்சிபெற்றனராம்.

கடலைக் கொட்டையில் நார் தயாரிப்பு

லண்டன், ஏப். 11—

கடலைக்கொட்டையிலிருந்து நார் தயாரிக்க பிரிட்டனில் செய்த முயற்சிகள் வெற்றி பெற்று விட்டன வென்றும் ஆனால், இது மார்க்கெட் விற்பனைக்குச சீக்கிரம் வந்து விடாதென்றும் கூறப்படுகிறது. இதைப்பொதுஜனஉபயோகத்திற்கு வெளியாகுமுன் இதிலுள்ள குற்றம் குறைகளை நீக்கிவிடவே முயற்சி செய்யப்படுவதாகத் தெரியவருகிறது.

மதுவிலக்கு மகத்துவம்

83 பேர் தண்டிக்கப்பட்டனர்

இன்று சென்னை மாகாண பிரதம மாஜிஸ்ட்ரேட் அவர்கள் மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் 83 பேருக்குத் தண்டனை விதித்தார்.

83 பேர்களில் 40 பேர் மதுவருந்தியிருந்ததாகவும், மற்றவர்கள் திருட்டுச் சாராயம் முதலியன வைத்திருந்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டனர்.

15 பேருக்கு தலைக்கு 12 முதல் 15 ரூபாய் வரையிலும் 30 பேருக்கு 15 முதல் 25 ரூபாய் வரையிலும் அபராதம் விதிக்கப்பட்டனர். எஞ்சியுள்ள மூவர் தம்மிடம் திருட்டுச் சாராயம் நிறைய வைத்திருந்ததற்காக ரூ. 50 முதல் 60 வரை அபராதம் விதிக்கப்பட்டனர்.

"இதுவரை ஆரோக்கியசாமி என்று அழைக்கப்பட்ட நான் இனி நல்லப்பன் என்று அழைக்கப்படுவேன் என்பதை, அன்பர்களுக்கு அறிவித்துக்கொள்ளுகிறேன்.
தே. நல்லப்பன்,
கிளார்க் D.M.E. ஆபீஸ், விழுப்புரம்

நல்ல ஆரம்பம்!

லண்டன், ஏப். 11—

இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கு மிடையே நல் உறவு ஏற்படுவதற்கான 'நல்லஆரம்பம்' ஏற்பட்டு விட்டதென்று குறிப்பிட்டு பண்டிதநேருவையும், லியாகத் அலிகானையும் பிரிட்டிஷ் பத்திரிகைகள் பாராட்டி தங்கள்மகிழ்ச்சியை வெளியிட்டிருக்கின்றன.

மீண்டும் இரு தலைவர்கள் சந்தித்துப் பேசுவர் என்பது, [illegible] இடம் [illegible] வட்டாரங்களில் கூறப்படுகிறது.

யுத்த பீதி இருநாடுகளிலும் ஏற்பட்டிருந்ததென்றும், அந்த நிழல் இரு தலைவர்களின் முயற்சியால் ஓரளவுக்கு நீக்கப்பட்டிருக்கிறதென்றும் ஒரு பத்திரிகை கூறியிருக்கிறது.

உடனடியாக தீர்க்க வேண்டிய விஷயம் அகதிகள் வருவதை நிறுத்துவது மைனாரிட்டிகளிடையே நம்பிக்கை ஏற்படுத்துவது என்றும் இவ்விஷயங்களில் இன்னும் எவ்வளவோ செய்யவேண்டியிருக்கிறதென்றாலும்செய்யப்பட்ட முயற்சி நல்ல ஆரம்பமாகும் என்று இங்குள்ள வட்டாரங்களில் கூறப்படுகிறது.

நட்சத்திர ஒளியைப்பற்றி ஆராய்ச்சி

லண்டன், ஏப். 11—

நட்சத்திரங்களின் ஒளிபற்றி ஆராய முழு சந்திரகிரஹணம் ஏற்பட வேண்டும் என்ற, டாக்டர் அலன்ஹண்டர் என்றவான சாஸ்திர ஆராய்ச்சி நிபுணர் சென்ற 6 மாதகாலமாகக் காத்திருந்தார்.

சந்திரன் ஒளி கிரஹண காலத்தில் பூமியின் நிழலைபட்டு முழுவதும் மறையும் போதுதான் நட்சத்திரங்களின் உண்மை வெளிச்சத்தின் தன்மையை உணர முடியுமாம்.

அவர் எதிர்பார்த்த பூரணசந்திரகிரஹணம் வந்தது. ஆனால் மேகங்கள் அடியோடு வானத்தை மறைத்துவிட்டதால் எவ்வித ஆராய்ச்சியும் செய்ய முடியவில்லை.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1.